ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ ரயில் நிலையம் அருகே

# பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் 11 மாடி கட்டிடம் கட்டும் பணி தீவிரம்

## • அலுவலகங்கள், பொழுதுபோக்கு அம்சங்களுடன் அமைகிறது

■ சென்னை

ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ ரயில் நிலையத்தில் புதியதாக 11 மாடி கட்டிடம் கட்டும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதில், தனியார் அலுவலகங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகியவை இடம்பெறவுள்ளன.

சென்னையில் தற்போது மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது 2-வது கட்டமாக மாதவரம் - சிறுசேரி, மாதவரம் - சோழிங்கநல்லூர், பூந்தமல்லி – விவேகானந்தர் இல்லம் என 3 வழித்தடங்களில் மொத்தம் 119 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ ரயில்களை இயக்குவதற்கான திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையே, மெட்ரோ ரயில் நிறுவனம் செலவை குறைத்து, மாற்று வழிகளில் வருமானத்தை பெருக்க பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எனவே, மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சொந்த இடங்களில் பெரிய அளவில் கட்டிடங்களை தனியார் மூலம் அமைப்பது, அதில் தனியார் நிறுவனங்களுக்கு வாடகைக்கு விடுவது, வணிக வளாகங்கள் அமைப்பது, பயணிகளை கவரும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்துவது போன்ற திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன.

குறிப்பாக சென்னை சென்ட்ரல், எழும்பூர், பரங்கிமலை உள்ளிட்ட இடங்களில் அமைந்துள்ள மெட்ரோ ரயில் நிலையங்களில் வணிக வளாகங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையே, ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ ரயில் நிலையம் அருகே 11 மாடி கட்டிடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது: மெட்ரோ ரயில் நிறுவனத்தில் செலவை குறைத்துக் கொண்டு இதர வழிகளில் வருமானத்தை பெருக்குவதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

குறிப்பாக, ரயில்வே இடங்களில் சோலார் மின்உற்பத்தி அதிகரிப்பு, விளம்பரங்கள் மூலம் வருவாய் அதிகரிப்பு, மெட்ரோவுக்கு சொந்த இடங்களில் வணிக வளாகங்கள் அமைப்பது அல்லது கட்டிடங்கள் அமைக்க தனியார் நிறுவனத்துக்கு அனுமதி அளிப்பது போன்ற நடவடிக்கை மூலம் வருவாயை திரட்டி வருகிறோம்.

இதற்கிடையே, ஈக்காட்டுத்தாங்கல் மெட்ரோ ரயில் நிலையம் அருகே 11 மாடியில் பிரமாண்டமான கட்டிடம் கட்டும் பணிகள் கடந்த நவம்பர் மாதத்தில் தொடங்கி தற்போது நடைபெற்று வருகிறது. அடுத்த 18 மாதங்களில் இதற்கான பணிகளை முடிக்க திட்டமிட்டுள்ளோம். இதில், பெரும்பாலும் ஐடி உள்ளிட்ட தனியார் நிறுவன அலுவலகங்கள் இடம் பெறுகின்றன.

இதுதவிர, தேவைக்கு ஏற்ப ஷாப்பிங் மால்கள், சில்லறை வணிக வளாகங்களும் இடம் பெறும். இவ்வாறு அவர்கள் கூறினர்.